௨௦ வைத்ததோர் பாசத்தி னுன்மலை சுற்றிடின் மண்டலிகற்
குற்றதோர் வான்பய முண்டென்பர் பாசங்கொண் டூர்வளைக்கி
லத்தல மாள்கின்ற மன்னவற் காமென்ப ரம்புயப்பூஞ்
சித்திரஞ் சேருந் துவசம்பெற் றாலுந் திருவருமே.

௨௧ திருவரு மென்ப ரெரிவது காண்கிற் புகையைக்கண்டால்
வருவது நோயென்பர் வானவர் செற்றலர் மாதவத்தோர்
பொருவரு பூண்முலை யாரொடு பூசுர ரென்றிவர்க
ளொருவ ருடன்சொல்லிற் சொல்லிய நன்மை யுறுமென்பரே.

௨௨ என்பும் பருத்தியு நீறும்வெண் சோறு மினிதுவைத்த
வன்புறு மோரிவை யைந்துந் தவிர வெளுத்தவெல்லா
மின்பந் தருமென்ப மேனியெல் லாமெறும் பூரக்கண்டாற்
றுன்பந் தவிர்ந்து நலங்களெல் லாம்வந்து சூழ்ந்திடுமே.

௨௩ சூழுங் கரியும் பரியுஞ் சுரருந் துலங்குமுந்நூல்
வாழுந் தலத்துறு மாமறை யோரும் வருமுலைப்பா
றாழும் பசுவிவை யைந்துந் தவிரக் கறுத்தவெல்லாம்
யாழுங் குழலும் புரையுஞ்சொல் லாயல்ல லெய்திடுமே.

௨௪ எய்திடுஞ் செல்வ மணிகைப்பெற் றாலெழின் மேகமெங்கும்
பெய்திடக் கண்டிடிற் பூசலுண் டாகும்பிண் ணாக்கரிசி
நைவது செய்திடு நஞ்சடர் வேல்விழி நாகரிகீர் [ளுமே.
கொய்திடுஞ் சாகமுங் கொள்ளியுந் தான்கொள்ளி னோய்கொள்

௨௫ கொள்ளும் பலாப்பழஞ் சாமை முதிரை குறுகிடினோ
யெள்ளும் வரகும் பெறிலின்ப மாம்பிற ரெச்சிற் கொண்டா
னள்ளும் பெரும்புக [ழல்லற் றருமென்னுஞ் சேகரஞ்சீர்
தெள்ளு மனவர தங்கள்பொன்]போற்செல்வஞ் சேர்ந்திடுமே.

௨௬ சேற்றுட் புகினு மிருட்டறை சேரினுஞ் [சேகரஞ்சீ]
ராற்றுக் குளிப்பினு மாழ்பிலஞ் சேரினு மாங்கமுகந்

---

[ ] இவ்வடையாளமிட்ட விடங்கள் நன்கு விளங்கவில்லை.

